கவனிக்க.– இவ் வர்த்தமானி ஒரு மறுபதிப்பாகும்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 757/7 - 1993 මාර්තු 10 වැනි බදාදා - 1993.03.10

**757/7 ஆம் இலக்கம் - 1993 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.– பீ 123/48.*

**மருத்துவக் கட்டளைச் சட்டம்**

(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 25, 33, 41(3), 45, 52, 57, 60 அத்துடன் 64 ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 72 ஆம் பிரிவின் கீழ் சுகாதார, மகளிர் விவகார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ரேணுகா ஹேரத்,
சுகாதார, மகளிர் விவகார அமைச்சர்.

*1992.11.03*

ஒழுங்கு விதிகள்

**தொழிலர்களுக்கெதிரான முறைப்பாடு**

பாகம் I

1. இவ்வொழுங்கு விதிகள் 1990 ஆம் ஆண்டின் மருத்துவ ஒழுக்காற்று (நடவடிக்கை முறை) ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மருத்துவப் பேரவை, எந்த ஏதுவின் மீது கட்டளைச் சட்டத்தின் 25(1) (அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கையெடுப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதுவாக அமைகின்ற ஏதேனும் நிகழ்வை அல்லது கருமத்தைச் சார்த்துகின்ற அந்தத் தொழிலருக்கெதிரான ஒரு முறைப்பாடு அல்லது அறிக்கை பேரவைக்கு அனுப்பப்படுமிடத்து, (இதனகத்துப்பின்னர் "தலைவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையின் தலைவர், இவ்வொழுங்குவிதிகளின் அடுத்துப் பின்வரும், ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பேரவையின் பதிவாளரை (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதனிலை நடவடிக்கைகள் குழுவுக்கு அத்தகைய முறைப்பாட்டை அல்லது அறிக்கையை, விசாரணைக்கென உயர் தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டிய விடயமொன்று உள்ளதாவெனப் பரிசீலனைசெய்து அறிக்கை செய்வதற்காக ஆற்றுப்படுத்தும்படி பணித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் முறைப்பாடு அல்லது அறிக்கை, தொழிலரொருவரின் நடத்தை அல்லது உயர் தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டை அல்லது தகுதியின்மை தொடர்பானதாகவிருந்து, அத்தகைய நடத்தை ஏதேனும் உயர்தொழில்சார் அம்சம் தொடர்பில் பிறழ்நடத்தையாக அமைகின்றது அல்லது அதன் காரணமாகத் தொழிலரைத் தொழிலராகத் தொடர்ந்து தொழில்புரிய அனுமதிக்கமுடியாதவாறு அத்தகைய அசட்டை அல்லது தகுதியின்மை உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டையாக அல்லது தகுதியின்மையாக அமைகின்றது எனத் தலைவருக்குத் தோன்றாதவிடத்து அல்லது ஏதேனும் முறைப்பாடு அல்லது அறிக்கை ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தொழிலரொருவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தல் தொடர்பானதாகவிருந்து, தொழிலருக்கு எந்தத் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதெனச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்தத் தவறு, தொழிலராகத் தொழில் புரிவதற்கு அவரைத் தகுதியற்றவராகக் காட்டுகின்றதெனத் தோன்றாதவிடத்து, அப்போது, தலைவர், அத்தகைய முறைப்பாட்டை அல்லது அறிக்கையைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்குப் பதிலாக, அத்தகைய முறைப்பாட்டை அல்லது அறிக்கையைப் பரிசீலனைக்கென பேரவையின் அடுத்த கூட்டத்தில் அதன் முன்னர் இடும்படி பதிவாளரைப் பணிக்கலாம்.

(3) ஓராம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தன்மையினதான தொழிலருக்கெதிரான முறைப்பாடு அல்லது அறிக்கை எதுவும், அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை பின்வருமாறு செய்யப்பட்டாலொழிய, ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது:-

(அ) தொழிலருக்கெதிராகச் சார்த்தப்பட்ட நிகழ்வுகளை அல்லது கருமங்களைத் தந்து, பதிவாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கூற்றொன்றென்ற வகையாக முன் வைக்கப்படுதல், அத்துடன்

(ஆ) அத்தகைய முறைப்பாடு அல்லாத அறிக்கை உயர்தொழில்சார் அம்சம் தொடர்பில் பிறழ்நடத்தையை அல்லது உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டையை அல்லது தகுதியின்மையைச் சார்த்துகின்ற ஒரு விடயத்தில் அத்தகைய முறைப்பாட்டில் அல்லது அறிக்கையில் சார்த்தப்பட்ட நிகழ்வுகள் அல்லது கருமங்கள் பற்றி ஒரு சத்தியக்கடதாசியினால் அல்லது சத்தியக்கடதாசிகளினால் ஆதாரப்படுத்தப்படுதல்:



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய முறைப்பாடு அல்லாத அறிக்கை ஒரு பகிரங்கத் தன்மையில் செயலாற்றுகின்ற ஓராளினால் செய்யப்படுமிடத்து, (ஆ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாட்டில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டுடன் அல்லது அறிக்கையுடன் கொடுத்துதவப்பட்ட சத்தியக்கடதாசி ஒவ்வொன்றும், மற்றவற்றுக்கிடையில் வாக்குமூலமளிப்பவரின்/உறுதியுரை செய்யபவரின் பெயர், பதவி, முகவரி என்பனவற்றைக் கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சத்தியக் கடதாசியில் கூறப்பட்ட ஏதேனும் நிகழ்வு அல்லது கருமம் வாக்குமூலமளிப்பவரின்/உறுதியுரை செய்பவரின் சொந்த அறிவுக்குட்படாதிருக்கும் ஒவ்வொரு விடயத்திலும், வாக்குமூலமளிப்பவரின்/உறுதியுரை செய்பவரின் தகவல் மூலத்தையும் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் அல்லது கருமத்தின் உண்மை பற்றிய நம்பிக்கையான ஏதுக்களையும் கூறுதலும் வேண்டும். தொழிலருக்கு முறைப்பாடு அல்லது அறிக்கை உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியில் "ஒரு பகிரங்கத் தன்மையில் செயலாற்றுகின்ற ஆள்" 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அல்லது பதிவாளர் அல்லது அரசாங்கத் திணைக்களத் தலைவர் அல்லது ஏதேனும் மாநகர சபைப் பிரதேசத்தின் மாநகர முதல்வர் அல்லது ஏதேனும் நகரசபையின் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது பதிவாளர் என்று பொருளாகும்.

3. (1) ஏதேனும் முறைப்பாடு அல்லது அறிக்கை, 2(2) ஆம் ஒழுங்கு விதியைப் பின்பற்றிப் பதிவாளரினால் பேரவையின் முன்னர் இடப்படுமிடத்து, பேரவை அதனைப் பரிசீலனை செய்து, அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை அல்லது அதன் ஏதேனும் பாகம் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமா அல்லவா எனத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை அல்லது அதன் ஏதேனும் பாகம் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படலாகாதெனப் பேரவை முடிவு செய்யின், பதிவாளர் அத்தகைய முடிவுபற்றி முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய முறைப்பாட்டை அல்லது அறிக்கையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்குப் பேரவை முடிபு செய்யின், பதிவாளர், பரிசீலனைக்கும் அறிக்கைக்குமென அதனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

4. இவ்வொழுங்கு விதிகளின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி ஒரு முறைப்பாடு அல்லது அறிக்கை, குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, தலைவர், முறைப்பாட்டில் அல்லது அறிக்கையில் சார்த்தப்பட்டுள்ள நிகழ்வை அல்லது கருமத்தை கூறி அது கிடைக்கப்பெற்றமையைத் தொழிலருக்கு அறிவிக்கும்படியும், ஒழுங்குவிதி 2(3) இன் கீழ் கொடுத்துதவப்பட்ட ஒவ்வொரு சத்தியக்கடதாசியினதும் பிரதியைத் தொழிலருக்கு அனுப்பும்படியும் அவருக்கெதிரான முறைப்பாட்டில் அல்லது அறிக்கையில் சார்த்தப்பட்டுள்ள அத்தகைய நிகழ்வுகள் அல்லது கருமங்கள் தொடர்பில் தொழிலர் அளிக்க விரும்பும் விளக்கமெதனையும் குழுவுக்குச் சமர்ப்பிக்கும்படி தொழிலருக்கு வேண்டுகோள் விடுக்கும் படியும் பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

5. குழுவுக்குப் பின்வரும் தத்துவங்கள் இருத்தல் வேண்டும்:-

(அ) பெற்றுக்கொடுப்பதற்கு அல்லது விசாரிப்பதற்கு அவசியமென அல்லது விரும்பத்தக்கதென குழு நினைக்கக்கூடியவாறு எழுத்திலான அல்லது வாய்மூல அத்தகைய எல்லாச் சான்றையும் பெற்றுக்கொடுத்துப் பெறுதல் ; அத்துடன் அத்தகைய எல்லா ஆட்களையும் சாட்சிக்காரராக விசாரித்தல் ;

(ஆ) எவரேனும் சாட்சிக்காரரின் (எழுத்திலான அல்லது வாய்மூல) சான்று சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது கொடுக்கப்படுவதைத் தேவைப்படுத்தல் ; அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரை, சாட்சிக்காரர் ஒரு சட்ட நீதிமன்றத்தில் சான்று அளிப்பின் அவசியம் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகையதாகவிருத்தல் வேண்டும், அத்துடன் அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுதல் அல்லது குழுவினால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட ஓர் அலுவலர் மூலம் எடுத்தோதுவித்தல்; அத்துடன்

(இ) குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தரும்படியும், சான்று கொடுக்கும்படியும் தனதுடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படியும் இலங்கையில் வதிகின்ற எவரேனுமாளைக் கட்டளைவிட்டழைத்தலும், அவரைச் சாட்சிக்காரராக விசாரித்தலும் அல்லது தனதுடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தைஅல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துதலும்.

6. இதற்கென முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகள், குழுவின் அமைப்புமுறை, குழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை என்பனவுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

7. (1) பதிவாளர், குழுவின் செயலாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் குழுவினால் வழங்கப்பட்ட ஒவ்வோர் அழைப்புக் கட்டளையும் அறிவித்தலும் அல்லது வேறு ஆவணமும் குழுவின் சார்பில் அத்தகைய பதிவாளரினால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) (அ) அழைப்புக்கட்டளையெதுவும், அதற்கெனப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளிடம் அதனை ஒப்படைப்பதன்மூலம் அல்லது அது, செயல்முறைக்குகந்ததல்லாவிடில், அவ்வாளின் கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் விட்டுவிடுவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(ஆ) அழைப்புக்கட்டளை எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள் ஒவ்வொருவரும் அதன்கண் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் குழு முன்னர் வருகை தருதல் வேண்டுமென்பதுடன், அழைப்புக் கட்டளையில் கூறப்பட்டவாறு சான்று கொடுத்தலும் அல்லது அவரிடம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவரது உடைமையிலுள்ள அல்லது தத்துவத்திலுள்ள அத்தகைய ஆவணங்களை அல்லது வேறு பொருள்களைக் காண்பித்தலும் வேண்டும்.

8. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் எந்த ஆளுக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த எவரேனுமாள் : -

(i) அழைப்புக்கட்டளையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் குழுவின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள காரணமின்றி குழு முன்னர் தோன்றுவதற்குத் தவறினால் ; அல்லது

(ii) சத்தியம் செய்து கொள்ள மறுத்தால், அல்லது உரிய முறையில் சத்தியம் செய்து கொண்டு குழுவினால் விசாரணை செய்யப்படுதற்குப் பணிக்கப்பட்ட கருமங்கள் குறித்து, அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு நியாயமான தாகவுள்ள காரணமின்றி விடையளிக்க மறுத்தால் அல்லது தவறினால் ; அல்லது

(iii) அவரது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதும், குழுவின் அபிப்பிராயப்படி விசாரணை செய்யப்படவுள்ள கருமங்களின் உண்மையை அறிவதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை குழுவின் அபிப்பிராயப்படி நியமானதாகவுள்ள காரணமின்றி முன்வைத்துக் காண்பிக்க மறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

9. குழுவானது, இரகசியமாக விசாரணையை நடாத்துதல் வேண்டும் அல்லது எவரேனுமாளின் சான்றைக் கேட்டல் வேண்டும்.

10. விசாரணை முடிவுற்றதன் மேல் குழுவானது, முறைப்பாட்டில் அல்லது அறிக்கையில் சார்த்தப்பட்டுள்ள நிகழ்வுக்குள் அல்லது கருமங்களுள் ஒவ்வொன்றின்மீதும் அதன் முடிவெடுப்புகளைக் கொண்டுள்ள அறிக்கையொன்றை அத்தகைய முறைப்பாட்டில் அல்லது அறிக்கையின் பிரதியொன்றையும் தயாரித்து உயர் தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகள், உயர்தொழில் சார் நடத்தைக் குழுவின் அமைப்பு முறை, அதன் கட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை என்பனவுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

12. (1) இவ்வொழுங்கு விதிகளின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் பரிசீலனைக்கென குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளவாறான ஏதேனும் குறைபாட்டின் மீது அல்லது அறிக்கையின் மீது அல்லது அத்தகைய பாகத்தின் மீது குழுவினால் 10 ஆம் ஒழுங்கு விதிகளின் கீழ் உயர் தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அறிக்கையொன்று அனுப்பப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக, உயர் தொழில்சார் நடத்தைக் குழு, குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்து, அம்முறைப்பாட்டின் அல்லது அவ்வறிக்கையில் சார்த்தப்பட்ட நிகழ்வுகள் அல்லது கருமங்கள் பற்றி விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமா அல்லவாவெனத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) விசாரணையெதுவும் நடாத்தப்படலாகாதென உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானிக்குமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக் குழு அதற்கிணங்க முறைப்பாட்டாளருக்கும் தொழிலருக்கும் அறிவிக்கும்படி பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

(3) குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள எல்லாக் கருமங்கள் பற்றியும் அல்லது அவற்றுள் எவை பற்றியும் விசாரணையொன்று நடாத்தப்படுதல் வேண்டுமென உயர் தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானிக்குமிடத்து, தொழிலருக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களைக் குறித்துரைக்கின்ற (இதனகத்துப்பின்னர் "அறிவித்தல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசாரணை அறிவித்தலொன்றைத் தொழிலருக்குச் சேர்ப்பிக்கும்படி பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியை பதிவாளர் அறிவுறுத்துதல் வேண்டும். இவ்வறிவித்தல் பொருளளவில் இவ்வொழுங்கு விதிகளுக்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலிருத்தல் வேண்டும்.

(4) தொழிலரின் சம்மதத்துடனன்றி, தொழிலருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இருபத்தியெட்டு நாட்களுக்கு முன்னரான ஏதேனும் தேதிக்கு விசாரணையெதுவும் நிர்ணயிக்கப்படுதலாகாது.

(5) அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும், தொழிலருக்கு, இடாப்பில் கூறப்பட்டவாறான அவரது முகவரிக்கு அல்லது அவரது கடைசியாக அறியப்பட்ட முகவரி இடாப்பிலுள்ள அவரது முகவரியிலிருந்து வித்தியாசப்படுவதோடு அத்தகைய சேர்ப்பித்தல் கூடுதலான பயனுடையதாகவிருக்குமெனச் சட்டத்தரணிக்குத் தோன்றின், அவரது கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு முகவரியிடப் பட்டு பதிவுக்கடதாசிமூலம் அஞ்சலில் அவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(6) அறிவித்தலுடன் இவ்வொழுங்கு விதிகளின் பிரதியொன்று அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) முறைப்பாட்டாளரொருவர் இருக்கும் ஒவ்வொரு விடயத்திலும், அறிவித்தலின் பிரதியொன்று முறைப்பாட்டாளருக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(8) சட்டத்தரணியானவர், ஏதேனும் விசாரணைக்கான திறத்தவரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதும், பேரவையினால் அதற்கென நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணக்கொடுப்பனவின் மீதும், மற்றைய திறத்தவரினால் பேரவைக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் சத்தியக் கடதாசியின், விளக்கத்தின் அல்லது வேறு கூற்றின் அல்லது கடிதத் தொடர்பின் பிரதிகளை அத்தகைய திறத்தவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

13. (1) ஒரு விசாரணைக்கு முன்னர் அல்லது அதன் ஏதேனும் கட்டத்தில், விசாரணை அறிவித்தல் ஒன்று குறைப்பாடுடையதென உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, உயர் தொழில்சார் நடத்தைக் குழுவானது, விடயத்தின் குற்றநற்றுக்களைக் கவனத்திற்கொண்டு, அநீதியின்றித் தேவையான திருத்தங்களைச் செய்யமுடியாமலிருந்தாலொழிய விடயத்தின் சூல்நிலைகளில் அவசியமென உயர்தொழில்சார் நடத்தைக்குழு கருதக்கூடிய அறிவித்தலைத் தருவதாகச் சட்டத்தரணிக்கு அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி அறிவித்தலொன்று திருத்தப்படுமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக்குழு அது தகுதியானதென நினைப்பின், விசாரணையை பின்போடலாம் அல்லது ஒத்திவைக்கலாம் அல்லது விடயத்தின் சூழ்நிலைகளில் அவசியமென உயர் தொழில்சார் நடத்தைக்குழுவுக்குத் தோன்றக்கூடியவாறு அதற்கென அத்தகைய வேறு பணிப்புகளை விடுக்கலாம்.

(3) உயர்தொழில்சார் நடத்தைக்குழு விசாரணைக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அல்லது அதன் சொந்தப்பிரேரணையின் மீது, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய, திகதிக்கு விசாரணையொன்றைப் பின்போடலாம் அல்லது ஒத்திவைக்கலாம்.

**உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் விசாரிப்புகளிலான நடவடிக்கைகள்**

பாகம் II

**அ. முதனிலை ஆட்சேபனைகள்**

14. அறிவித்தல் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலும் நேரத்திலும் உயர்தொழில் சார் நடத்தைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்குத் தொழில் தவறுமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவானது, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விசாரணை அறிவித்தலொன்று

தொழிலருக்கு உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென உயர்தொழில்சார் நடத்தைக் குழுவைத் திருப்திப்படுத்தும்படி சட்டத்தரணியைக் கோருதல் வேண்டுமென்பதுடன், அறிவித்தலானது அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்டுள்ளதெனத் திருப்திப்படின் விசாரணையை மேற்கொண்டு நடத்தலாம்.

15. (1) உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் முன்னர் தொழிலர் தோன்றியிருக்குமிடத்து அல்லது அவர் தோன்றத் தவறியிருக்கும் ஒரு விடயத்தில் உயர் தொழில்சார் நடத்தைக்குழு விசாரணையை மேற்கொண்டு நடாத்துவதற்கு முடிவு செய்துள்ளவிடத்து, தொழிலருக் கெதிரான குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுக்கள் சட்டத்தரணியினால் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு முதலில் வாசிக்கப்படுதல் வேண்டும்.

(2) குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்ட பின்னர், தொழிலர், அவர் சமுகமாயிருந்து அவ்வாறு விரும்பின், சட்டக்குறிப்பொன்றின் மீது ஏதேனும் குற்றச்சாட்டுக்கு ஆட்சேபனை தெரிவிக்கலாம் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் ஆட்சேபணையின் மேல் சட்டத்தரணி அதற்கு விடையளிக்கலாம்.

(3) அத்தகைய ஏதேனும் ஆட்சேபனை நிலைநாட்டப்படின் அந்த ஆட்சேபனை எந்தக்குற்றச்சாட்டு தொடர்பானதோ அந்தக் குற்றச் சாட்டு தொடர்பில் உயர்தொழில்சார் நடத்தைக்குழுவினால் மேலும் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.

**ஆ. தொழிலரின் நடத்தை தொடர்பான வழக்குகள்**

16. தொழிலரொருவரின் நடத்தை தொடர்பான வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் பின்வரும் நடவடிக்கை முறையானது, 14 ஆம் 15 ஆம் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, பின்பற்றப்படுதல் வேண்டும் : -

(1) சட்டத்தரணியானவர், குழுவின் அறிக்கை எந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அந்த நிகழ்வுகளை முன்வைத்தல் வேண்டும்.

(2) சட்டத்தரணியானவர், குற்றச்சாட்டில், அல்லது குற்றச் சாட்டுகளில் சார்த்தப்பட்ட நிகழ்வுகள் பற்றிய அல்லது அவர் எண்பிப்பதற்குத் தயாராகவுள்ள குற்றச்சாட்டாக அல்லது குற்றச்சாட்டுக்களாக அமைகின்ற அந்த நிகழ்வுகளுள் அத்தகையவை பற்றிய சான்றை அளித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் குற்றச்சாட்டின் தொடர்பில் சான்றெதுவும் அல்லது அளிக்கப்படாதிருப்பின், உயர்தொழில்சார் நடத்தைக்குழு, குற்றச்சாட்டு தொடர்புபட்ட கருமங்கள் தொடர்பில் உயர் தொழில்சார் அம்சம் தொடர்பில் தொழிலர் விடயத்திற்கேற்ப பிறழ் நடத்தைக்கு அல்லது உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டைக்கு அல்லது தகுதியின்மைக்குக் குற்றவாளியல்ல யென்ற முடிவெடுப்பைப் பதிந்து, தவிசாளர் அதனைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(4) அவருக்கெதிரான வழக்குகள் முடிவுற்றதும் தொழிலர், அவர் அவ்வாறு விரும்பின் எந்தக் குற்றச்சாட்டுப்பற்றி சான்று அளிக்கப் பட்டுள்ளதோ அந்த ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் பின்வரும் சமர்ப்பணங்களுள் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ செய்யலாம் ; அதாவது :-

(அ) குற்றச்சாட்டில் சார்த்தப்பட்ட நிகழ்வுகள் எண்பிக்கப்பட்டுள்ளன என உயர்தொழில்சார் நடத்தைக்குழு எந்தச் சான்றின் மீது காணக்கூடுமோ, போதிய அந்தச்சான்று எதுவும் அளிக்கப்படவில்லையென்று ; அல்லது

(ஆ) குற்றச்சாட்டில் சார்த்தப்பட்ட நிகழ்வுகள், உயர்தொழில்சார் அம்சம் தொடர்பில் பிறழ்நடத்தையாக அமைகின்ற அல்லது அவரைத் தொழில் புரிவதற்குத் தகுதியற்றவராக்குகின்ற உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பான அத்தகைய அசட்டையாக அல்லது தகுதியின்மையாக அமைகின்ற அத்தகையவையல்லவென்று ;

அத்துடன் மேற்பட்டவாறான அத்தகைய ஏதேனும் சமர்ப்பணம் செய்யப்படுமிடத்து, சட்டத்தரணி அதற்கு விடையளிக்கலாம்.

(5) (அ) கடைசியாக முற்போந்த பந்தியின் கீழ் சமர்ப்பணம் செய்யப்படுமிடத்து உயர்தொழில்சார் நடத்தைக்குழு அத்தகைய சமர்ப்பணம் நிலைநாட்டப்பட்ட வேண்டுமாவெனப் பரிசீலனை செய்து தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) உயர்தொழில்சார் நடத்தைக்குழு ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் அத்தகைய சமர்ப்பணத்தை நிலைநாட்ட முடிவு செய்யுமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக்குழு, அக்குற்றச்சாட்டு தொடர்புபட்ட கருமங்கள் தொடர்பில் தொழிலர், விடயத்துக்கேற்ப உயர் தொழில்சார் அம்சம் தொடர்பில் பிறழ்நடத்தைக்கு அல்லது உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டைக்கு அல்லது தகுதியின்மைக்குக் குற்றவாளியல்லரென்ற முடிவெடுப்பைப் பதிதல் வேண்டும்.

(இ) உயர்தொழில்சார் நடத்தைக்குழு அத்தகையவொரு சமர்ப்பணம் பற்றித் தீர்மானமொன்று செய்திருக்குமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக்குழு தகுதியென நினைக்கக்கூடிய அத்தகைய முறையில் தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் தீர்மானத்தைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(6) எந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் சான்று அளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் குற்றச்சாட்டு தொடர்பில், தொழிலர், அத்தகைய குற்றச்சாட்டை எண்பிக்காதுவிடுதற்குச் சான்று அளிக்கலாம் ; அத்துடன் அவர் சான்று அளித்தாலும் சரி அல்லாவிடினுஞ்சரி, உயர்தொழில்சார் நடத்தைக்குழுவை விளித்துப் பேசலாம். இப்பந்தியின் கீழ் ஒரு தடவை மாத்திரமே விளித்துப் பேச அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தொழிலர் சான்று அளிக்குமிடத்து அவ்வாறு விளித்துப் பேசுதல், ஒன்றில் அத்தகைய சான்று தொடங்கு முன்னரோ அல்லது முடிவுற்ற பின்னரோ செய்யப்படுதல் வேண்டும்.

(7) தொழிலருக்கான வழக்கு முடிவுற்றதன்மேல், சட்டத்தரணியானவர், உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் அனுமதியுடன், தொழிலரினால் அளிக்கப்பட்ட ஏதேனும் சான்றை மறுதலிப்பதற்கான சான்றை அளிக்கலாம். அத்துடன் அவர் அவ்வாறு செய்யின், தொழிலர் மேலுமொரு தடவை குழுவை விளித்துப் பேசலாம் என்பதுடன், அவ்வாறு விளித்துப் பேசுதல் மறுதலிக்கும் சான்றுக்கு வரையறுக்கப்படுதலும் வேண்டும்.

(8) சட்டத்தரணியானவர், தொழிலரின் வழக்குக்கான விடையளிப்பு என்ற வகையில், பின்வரும் சந்தர்ப்பங்களில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை விளித்துப் பேசலாம் :-

(அ) தொழிலரின் வாய்மூலச் சான்றில்லாத (குணநலம் பற்றிய சான்றாகவிராத) வாய்மூலச் சான்று தொழிலரின் சார்பாக நடாத்தப்பட்டிருப்பின் ; அல்லது

(ஆ) அத்தகைய சான்றெதுவும் அளிக்கப்படாத ஒரு வழக்கில் உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் அனுமதியுடன்,

(9) முற்போந்த பந்தியின் எற்பாடுகளுக்குப் பங்கமின்றி, சட்டக்குறிப்பொன்றின் மீது தொழிலாளர் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்குச் சமர்ப்பணமொன்றைச் செய்துள்ளவிடத்து, சட்டத்தரணி அச்சமர்ப்பணத்துக்கு வரையறுக்கப்பட்ட விடையளிப்பு உரிமையை உடையவராயிருத்தல் வேண்டும்.

17. நடத்தை தொடர்பான ஒரு வழக்கில் தோற்றத்தவறி, உயர்தொழில் சார் நடத்தைக்குழு விசாரணையை மேற்கொண்டு நடாத்த முடிவு செய்துள்ளவிடத்து, 16ஆம் ஒழுங்குவிதியின் (4) முதல் (9) வரையிலான பந்திகளின் ஏற்பாடுகள் அத்தகைய விசாரணைக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலாகாது.

18. (1) ஒன்றில் 16ஆம் ஒழுங்குவிதியின் அல்லது 17ஆம் ஒழுங்கு விதியின் கீழான நடவடிக்கைகள் முடிவுற்றதன் மேல், உயர்தொழில்சார் நடத்தைக்குழுவானது, குற்றச்சாட்டு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் இருப்பின், தள்ளுபடி செய்யப்பட்ட ஒரு குற்றச்சாட்டு அல்லாததான சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுள் ஏதேனுமொன்று உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டுள்ளதாவெனப் பரிசீலனை செய்து தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியில் தள்ளுபடி செய்யப்பட்ட ஒரு குற்றச் சாட்டுக்கான குறிப்பீடு, உயர்தொழில்சார் அம்சம் தொடர்பில் தொழிலர் பிறழ் நடத்தைக்குக் குற்றவாளியல்லரென, அல்லது விடயத்துக்கேற்ப தொழிலரொருவராகத் தொழில் புரிவதற்கு அவரைத் தகுதியற்றவராக்குகின்ற உயர் தகுதியற்றவராக்குகின்ற உயர் தொழில்சார் கடமைகள் தொடர்பான அசட்டைக்கு அல்லது தகுதியின்மைக்குக் குற்றவாளியல்லரென உயர்தொழில்சார் நடத்தைக்குழு ஏலவே முடிவெடுப்பைப் பதிந்துள்ள ஒரு குற்றச்சாட்டுக்கான குறிப்பீடொன்றாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் திருப்திக்கு குற்றச்சாட்டுகளுள் எவையும் எண்பிக்கப்படவில்லையென உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானிக்குமிடத்து, உயர்தொழில்சார் நடத்தைக்குழு குற்றவாளியல்லரென்ற முடிவெடுப்பைப் பதிந்து, தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக்குழு தகுதியென நினைக்கக்கூடிய அத்தகைய முறையில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவெடுப்பைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான காரணங்களை அது தருதல் வேண்டும். அதன்மேல் தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை விளித்துப் பேசுவதற்கு விரும்புகிறாராவெனத் தொழிலரிடம் கேட்டல் வேண்டும் என்பதுடன், பின்னர் தொழிலர், அவ்வாறு விரும்பின், தண்டனைக்குறைப்பு என்ற வகையாக உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை விளித்துப் பேசி, கட்டளைச் சட்டத்தின் 25(1)(அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கையெடுப்பதற்கு உயர்தொழில்சார் நடத்தைக் குழு ஏன் கட்டளையாக்கக் கூடாதெனக் காரணம் காட்டலாம். தொழிலர், தனது நற்குண நலன் பற்றியும் சான்று அளிக்கலாம்.

19. மேற்கூறப்பட்டவாறு உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை விளித்துப் பேசி சான்று அளிப்பதற்கான சந்தர்ப்பம் தொழிலருக்கு அளிக்கப்பட்ட பின்னர், அவர் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால், அவரது குழுவை விளித்துப் பேசுதல் அல்லது அவரது சான்று முடிவுற்ற பின்னர், உயர்தொழில் சார் நடத்தைக் குழு, கட்டளைச் சட்டத்தின் 25(1) (அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமா என்பதுபற்றி அதன் முடிவைப் பின்போடுவதாவென உயர் தொழில்சார் நடத்தைக்குழு பரிசீலனை செய்து தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன் உயர் தொழில்சார் நடத்தைக்குழு அவ்வாறு தீர்மானித்தால், உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவு, உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறு உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் அத்தகைய எதிர்வரும் கூட்டம் வரை பின்போடப்பட்டதாதல் வேண்டும். தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக் குழு தகுதியென நினைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் உயர் தொழில்சார் நடத்தைக்குழுவின் தீர்மானத்தைப் பிரகனப்படுத்தல் வேண்டும்.

20. உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிபானது பின்போடப்படுதலாகாதென உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானிப்பின், உயர் தொழில்சார் நடத்தைக் குழு தகுதியென நினைக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிபைத் தவிசாளர் உடனடியாகப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

21. அதன் பின்னர் உயர்தொழில்சார் நடத்தைக் குழு அதன் தீர்மானத்தைப் பேரவைக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய முடிபைப் பெற்றதன் மேல், அம்முடிபுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படி பதிவாளரால் பேரவை பணித்தல் வேண்டும்.

**இ. தொழிலரின் திப்புளோமா, பட்டம் முதலியன பறிக்கப்படுதல் தொடர்பான வழக்குகள்**

22. முறைப்பாடு அல்லது அறிக்கை : -

(அ) மருத்துவத் தொழிலரொருவராகவுள்ள ஒரு தொழிலரின் விடயத்தில் அவர் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனும் திப்புளோமா, பட்டம் அல்லது சானறிதழ் அவரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளமை ; அல்லது

(ஆ) பல்மருத்துவரொருவராகவுள்ள ஒரு தொழிலரின் விடயத்தில், அவர் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது பல்மருத்துவராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனும் திப்புளோமா, பட்டம் அல்லது சான்றிதழ் அவரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளமை; அல்லது

(இ) அப்போதிக்கரியொருவராகவுள்ள தொழிலரின் விடயத்தில், அவர் எந்தச் சான்றிதழின் விசுவாசத்தின் மீது மருத்துவ, அறிவை மருத்துவத் தொழில் புரிவதற்கு அப்போதிக்கரி ஒருவராகக் கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டாரோ அந்தச் சான்றிதழ் பறிக்கப்பட்டுள்ளமை ; அல்லது

(ஈ) மருத்துவிச்சியாகவுள்ள தொழிலரொருவரின் விடயத்தில், அவர் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது மருத்துவிச்சியாகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனும் திப்புளோமா பட்டம் அல்லது சான்றிதழ் பறிக்கப்பட்டுள்ளமை ; அல்லது

(உ) வாகடரொருவராகவுள்ள தொழிலரின் விடயத்தில், அவர் எந்தத் திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது ஒரு வாகடராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனம் திப்புளோமா, பட்டம் அல்லது சான்றிதழ் பறிக்கப்பட்டுள்ளமை ; அல்லது

(ஊ) துணைமருத்துவ உதவியாளரொருவராகவுள்ள தொழிலரின் விடயத்தில், அவர் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது ஒரு துணைமருத்துவ உதவியாளராகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த எதேனும் திப்புளோமா, பட்டம் அல்லது சான்றிதழ் பறிக்கப்பட்டுள்ளமை ; அல்லது

(எ) ஒரு தாதியாகவுள்ள தொழிலரொருவரின் விடயத்தில், அவ்வாள் எந்த திப்புளோமாவின், பட்டத்தின் அல்லது சான்றிதழின் விசுவாசத்தின் மீது தாதியாகப் பதிவு செய்யப்பட்டாரோ அந்த ஏதேனும் திப்புளோமா, பட்டம் அல்லது சான்றிதழ் பறிக்கப்பட்டுள்ளமை,

தொடர்பாகவிருக்குமிடத்து, அத்தகைய முறைப்பாட்டின் அல்லது அறிக்கையின் விசாரிப்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையானது 14ஆம், 15 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பின்வருமாறாதல் வேண்டும்:-

(1) சட்டத்தரணி, தொழிலருக்கெதிராக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் சான்றளித்தல் வேண்டும்;

(2) சட்டத்தரணியினால் சான்றெதுவும் அளிக்கப்படாவிடின், அப்போது தவிசாளர் குற்றச்சாட்டு எண்பிக்கப்பட வில்லையெனப் பிரகடனப்படுத்தல் வேண்டும் ;

(3) ஏதேனும் சான்று அளிக்கப்பட்டு தொழிலர் விசாரணையில் சமுகமளித்திருப்பின், குற்றச்சாட்டை எண்பிக்காதுவிடுவதற்குத் தொழிலர் சான்றளிக்கலாம் என்பதுடன், ஒன்றில் அவரது சான்று தொடங்கு முன்னரோ அல்லது அது முடிவுற்ற பின்னரோ உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை அவர் விளித்துப்பேசலாம் ;

(4) மேற்கூறப்பட்டவாறு உயர்தொழில்சார் நடத்தைக் குழுவை விளித்துப் பேசுவதற்கும் சான்றளிப்பதற்குமான சந்தர்ப்பம் தொழிலருக்கு அளிக்கப்பட்ட பின்னர் அவர் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால், அவரது சான்றும் விளித்துப் பேசுதலும் முடிவுற்ற பின்னர் (ஏதேனுமிருப்பின்), உயர்தொழில் சார் நடத்தைக்குழு, குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதாவெனவும், அவ்வாறாயின், கட்டளைச் சட்டத்தின் 25(1)(அ) எனும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ என்பதுபற்றி உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவு, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் எதிர்வரும் கூட்டமொன்றுக்குப் பின் போடப்பட வேண்டுமாவெனவும் பரிசீலனை செய்து தீர்மானித்தல் வேண்டும் ;

(5) குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானித்து, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவு பின்போடப்படுதல் வேண்டுமென மேலும் தீர்மானிப்பின், அப்போது, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவு, உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானிக்கக்கூடியவாறாக உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் அத்தகைய எதிர்வரும் கூட்டத்துக்குப் பின்போடப்பட்டதாதல் வேண்டும் ;

(6) உயர் தொழில்சார் நடத்தைக் குழு அதன் முடிவு பின்போடப்படுதலாகாதெனத் தீர்மானிப்பின், அப்போது தவிசாளர், உயர் தொழில்சார் நடத்தைக்குழு தகுதியென நினைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில், அதற்கான அதன் காரணங்களோடு உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(7) குற்றச்சாட்டு எண்பிக்கப்படவில்லையென உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானிப்பின், தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவை அதற்கிணங்கப் பிரகடனப்படுத்தல் வேண்டும் ;

(8) அதன்பின்னர் உயர்தொழில்சார் நடத்ததைக் குழு அதன் முடிவைப் பேரவைக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய முடிவைப் பெற்றதன் மேல் பதிவாளர், அம்முடிவுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகவிருக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படி பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

**தொழிலர் ஒருவருக்குக் குற்றத் தீர்ப்பளிப்பது தொழிலாளர் தொடர்பிலான விடயங்கள்**

23. முறைப்பாடு அல்லது அறிக்கை தொழிலர் ஒருவருக்கு நீதிமன்றம் குற்றத் தீர்ப்பளிப்பது தொடர்பாக இருக்குமிடத்து, 14 ஆம், 15 ஆம் ஒழுங்குவிதிகளிலுள்ள ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, பின்வரும் நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்:-

(1) சட்டத்தரணி, குற்றத்தீர்ப்பு பற்றியும் குற்றத் தீர்ப்புக்கு இட்டுச்செல்கின்ற சூழ்நிலைகள் பற்றியும் சான்று எடுத்துக் கூறப்படுதல் வேண்டும். அவ்வாறு சான்று எதுவும் சட்டத்தரணியினால் எடுத்துக் கூறப்படவில்லலையானால், குற்றத் தீர்ப்பு எண்பிக்கப்பட வில்லையெனத் தவிசாளர் அறிவித்தல் வேண்டும் ;

(2) (அ) சான்று அவ்வாறு எடுத்துக் கூறப்படாவிட்டால், தவிசாளர், தொழிலரை, அவர் தன்பக்க நியாயத்தை உயர்தொழில் சார் நடத்தைக் குழுவிற்கு எடுத்துரைக்க விரும்புகின்றாரா எனக் கேட்டல் வேண்டும். அத்துடன் தொழிலர், அதன் பின்னர், அவர் அவ்வாறு விரும்பினால் அவர் எத்தவறு புரிந்த காரணமாக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டாரென சார்த்தப்பட்டு தம் தொழிலை நடத்துவதற்கு தகுதி அற்றவரென காட்டுகின்றது. தொடர்பில், தம்பக்க நியாயத்தை உயர் தொழில்சார் நடத்தைக் குழுவிற்கு எடுத்துக் கூறுதல் வேண்டும். அத்துடன் தண்டனைக் குறைப்பு என்ற வகையில் பதிவாளர் கட்டளைச் சட்டத்தின் 25(1) (அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அல்லது எக்காரணமானாலும் உடனடியாக முடிவு ஒன்றை எடுக்க முனையக் கூடாது என உயர்தொழில்சார் நடத்தைக் குழு பதிவாளரை ஏன் பணிக்கக் கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டலாம், அல்லது அவர், தமக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகள் தொடர்பில் தான் விரும்பும் வேறு எவையேனும் சமர்ப்பிப்புக்களை செய்யலாம். அவர் தமது நற்குணம் தொடர்பாக சான்றையும் எடுத்துக் கூறலாம் ;

(ஆ) பந்தி (அ) வின் கீழ் ஒரே ஒரு சமர்ப்பிப்பு மட்டும் அனுமதிக்கப்படல் வேண்டும். அத்துடன் தொழிலர் சான்று எடுத்துக் கூறுமிடத்து, ஒன்றில் அச்சமர்ப்பிப்பு அத்தகைய சான்று ஆரம்பிக்கப்பட முன்னர் அல்லது அது முடிவுற்ற பின்னர் செய்யப்படல் வேண்டும்.

(3) மேற்கூறப்பட்டவாறு தொழிலருக்கு உயர்தொழில்சார் நடத்தைக் குழுவிற்கு தம்பக்க நியாயத்தை எடுத்துக் கூறுவதற்கும் சான்று அளிப்பதற்கும் சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்பட்ட பின்னர், அத்துடன் அவர் தமது நியாயக் கோரிக்கையை அல்லது சான்றைப் பூர்த்தி செய்த பின்னர், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால், உயர் தொழில்சார் நடத்தைக் குழுவானது, குற்றத்தீர்ப்பு

எண்பிக்கப்பட்டுவிட்டதா எனப் பரிசீலித்தல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறானால் உயர்தொழில் சார் நடத்தைக் குழுவானது கட்டளைச்சட்டத்தின் 25 (1) (அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமா என்பது பற்றிய அதனது முடிவைப் பிற்போடல் வேண்டும் ;

(4) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிபானது, உயர்தொழில் சார் நடத்தைக் குழுவின் வருங்காலக் கூட்டம் ஒன்றிற்குப் பிற்போடப்பட வேண்டுமென உயர்தொழில்சார் நடத்தைக்குழுவானது தீர்மானித்தல். உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானிக்கின்றவாறாக உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் அத்தகைய வருங்காலக் கட்டத்தில் உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிபானது எடுக்கப்படல் வேண்டுமென பிற்போடப்படல் வேண்டும்;

(5) உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் முடிவானது பிற்போடப்படக்கூடாதென உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானித்தால், தவிசாளர், உயர்தொழில்சார் நடத்தைக்குழு தகுந்ததெனத் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் உயர்தொழில் சார் நடத்தைக்குழுவின் முடிபை உடனடியாக அறிவித்தல் வேண்டும்;

(6) உயர்தொழில்சார் நடத்தைக் குழு, அதன் பின்னர் முடிபு பற்றிப் பேரவைக்குத் தெரிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மேல், பேரவை, அம்முடிவுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு பதிவாளரைப் பணித்தல் வேண்டும்.

## பாகம் III

### உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவு பிற்போடப்படுமிடத்தான நடவடிக்கை முறை

24. (1) இவ்வொழுங்கு விதிகளின் முற்போந்த எவையேனும் ஏற்பாடுகளின் கீழ், ஏதாவது விடயம் தொடர்பில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிபு (இதனகத்துப் பின்னர் "பிந்திய கூட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் வருங்காலக் கூட்டமொன்றுக்குப் பிற்போடப்படுமிடத்து, சட்டத்தரணி, சொல்லப்பட்ட கூட்டம் நடாத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன் ஆறு வாரங்களுக்குக் குறையாமல் தொழிலரிடம் : -

(அ) பிந்திய கூட்டம் நடாத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி, நேரம், இடம் ஆகியவற்றை குறித்துரைக்கின்ற, அத்துடன்

(ஆ) அக்கூட்டத்தில் தோன்றுமாறு அவரைத் தேவைப்படுத்துகின்ற, அறிவித்தலொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழான அறிவித்தலொன்று, தலைவர் வேறுவிதமாகப் பணித்தாலொழிய, தொழிலரின் நற்குணத்தைப்பற்றி விசாரிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினரான ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் பதிவாளருக்குக் கொடுத்துதவுமாறு தொழிலரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் இடாப்பில் காட்டப்பட்டிருக்கின்றவாறு தொழிலருக்கு, தொழிலரின் முகவரிக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அவருடைய கடைசியாகத் தெரிந்த முகவரிக்கு (அம்முகவரி இடாப்பில் இருக்கும் முகவரியிலிருந்து வித்தியாசப்பட்டால் அத்துடன் அவ்வாறு செய்வதுகூடிய பயனுள்ளதாக இருக்கும் என்று சட்டத்தரணிக்குத் தோன்றினால்) அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) முறைப்பாட்டாளர் ஒருவர் இருக்கும் வழக்கு ஒவ்வொன்றிலும், அத்தகைய அறிவித்தலின் பிரதி ஒன்று முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

25. (1) இருபத்து நாலாம் ஒழுங்குவிதியின் கீழ் தொழிலர் ஒருவரிடம் சேர்ப்பிக்கப்படும் அறிவித்தல் ஒன்று, அவருடைய வழக்கு மீள் பரிசீலனை செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன் மூன்று வாரங்களுக்குள் பதிவாளருக்கு -

(அ) அவருடைய வழக்கு விசாரிக்கப்பட்டதிலிருந்து எழுந்துள்ளவானவையும் அவருடைய வழக்கை மீள் பரிசீலனை செய்வதற் கான உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் கவனத்துக்கு, அவர் கொண்டு வர விரும்புகின்றவையுமான எவையேனும், நிகழ்வுகள் பற்றிய கூற்றொன்றை அல்லது சத்தியக் கடதாசியை; அத்துடன்

(ஆ) அவர் பயன்படுத்த விரும்புகின்றதானதும் வழக்கு விசாரிக்கப்படத் தொடங்கியதிலிருந்து அவரின் நடத்தை அல்லது தகைமை தொடர்பானதுமான கூற்றொன்றாக இருப்பதுமான ஏதேனும் கூற்றின் அல்லது சத்தியக் கடதாசியின் பிரதியொன்றை, அனுப்பி வைக்குமாறு தொழிலரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) முறைப்பாட்டாளர் ஒருவர் இருக்கும் வழக்கு எதிலும், (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி சட்டத்தரணிக்கு, தொழிலரினால் அனுப்பி வைக்கப்படும் ஏதேனும் கூற்றின் அல்லது சத்தியக் கடதாசியின் பிரதியொன்றும் முறைப்பாட்டாளருக்குச் சட்டத்தரணியினால் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன், தொழிலரினால் அவ்வாறு அனுப்பப்பட்ட ஏதேனும் கூற்றில் அல்லது சத்தியக் கடதாசியில் தரப்பட்டுள்ள விடயங்கள் பற்றி முறைப்பாட்டளர், ஏதேனும் கூற்றை அல்லது சத்தியக் கடதாசியை சட்டத்தரணிக்குத் தாமாகவோ அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

26. மூல விசாரிப்பின் பின், தொழிலருக்கு எதிராக புதிதாக முறைப்பாடு அல்லது அறிக்கை ஒன்று செய்யப்பட்டு, அத்துடன், அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை பிந்திய கூட்டத்தில் விசாரிப்புக்கென உயர்தொழில் சார் நடத்தைக் குழுவுக்கு முறையாக ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கு மிடத்து, உயர்தொழில்சார் நடவடிக்கைக் குழுவானது, முதலில் அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை பற்றி விசாரணை செய்தல் வேண்டும். அத்துடன், அவ்விசாரணையில் தொழிலர் தமக்கெதிராகச் செய்யப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டால் அல்லது, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவானது குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுவிட்டதெனத் தீர்மானித்தால், இவ்வொழுங்கு விதிகளின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், உயர்தொழில்சார் நடத்தைக் குழுவானது, அத்தகைய குற்றச்சாட்டானது, எக்குற்றச்சாட்டுகளின் மீதான உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் முடிவானது பிந்திய கூட்டத்துக்குப் பிற்போடப்பட்டிருக்கிறதோ, அக்குற்றச்சாட்டுக்களில் ஒன்று என்றவாறு அத்தகைய குற்றச்சாட்டுத் தொடர்பில் தொடர்ந்து விசாரித்தல் வேண்டும்.

27. பிந்திய கூட்டத்தில், தவிசாளர், வழக்கு எந்நிலையில் இருக்கிறதென்பதை உயர்தொழிசார் நடத்தைக் குழு தெரிந்து கொள்வதற்குத் தகவல் கூறுவதற்கு முதலில் சட்டத்தரணியை அழைத்தல் வேண்டும். அதன் பின்னர் உயர்தொழில்சார் நடத்தைக் குழு -

(அ) வழக்கு நடவடிக்கைகளில் வேறு எவரேனும் திறத்தவரை விசாரிக்கலாம், அல்லது

(ஆ) கடைசி விசாரிப்பின் பின்னர், வழக்குத் தொடர்பில் அல்லது தொழிலரின் நடத்தை தொடர்பில் உயர்தொழில் சார் நடத்தைக் குழு தகுந்ததென எண்ணுகின்றவாறான மேலும் அத்தகைய வாய்மூல அல்லது ஆவணச் சான்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

28. உயர்தொழில்சார் நடத்தைக் குழு அதன் பின்னர் பரிசீலித்து, உயர் தொழில்சார் நடத்தைக் குழு இக்கட்டளைச் சட்டத்தின் 25 (1) (அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டுமா அல்லவா என்பது பற்றித் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன், உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் தீர்மானம், உயர்தொழில்சார் நடத்தைக் குழு தகுந்ததென எண்ணுகின்றவாறான அத்தகைய விதத்தில் தவிசாளரினால் அறிவிக்கப்படல் வேண்டும்.

## பாகம் IV

## இடாப்பொன்றில் பெயர்களை மறுபடியும் சேர்த்துக்கொள்ளல்

29. இயைபான இடாப்பிலிருந்து இக்கட்டளைச் சட்டத்தின் 25(1) (அ) என்னும் பிரிவின் கீழ் பெயர் நீக்கப்பட்ட தொழிலர் ஒருவர், இடாப்பில் தமது பெயர் மீண்டும் சேர்ப்பிக்கப்படுவதற்கு விண்ணப்பிக்கின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் பின்வரும் நடவடிக்கை முறை ஏற்புடையதாதல் வேண்டும் :-

(1) விண்ணப்பத்தின் மீது விண்ணப்பதாரர் உயர்தொழிலசார் நடத்தைக் குழுவுக்கு தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கு உயர் தொழில்சார் நடத்தைக் குழு விண்ணப்பக்காரருக்குச் சந்தர்ப்பம் ஒன்று அளித்தல் வேண்டும்;

(2) விண்ணப்பம் தொடர்பில் உயர்தொழில்சார் நடத்தைக்குழு தீர்மானமொன்றை எடுக்க முன்னர், விண்ணப்பக்காரரின் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டதிலிருந்து அவரை இனங்காணுவது பற்றி அல்லது அவரது நடத்தை பற்றி உயர் தொழில்சார் நடத்தைக் குழு அவசியமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய சத்தியக் கடதாசிகள் அல்லது சான்றிதழ்கள் உயர் தொழில்சார் நடத்தைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென அல்லது அத்தகைய வாய் மூலச்சான்று உயர் தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென உயர்தொழில்சார் நடத்தைக் குழு தேவைப்படுத்தப்படலாம்;

(3) உயர்தொழில்சார் நடத்தைக்குழு, தகுந்ததென அதுகருதினால், டிப்புளோமா, பட்டம் அல்லது சான்றிதழ் வழங்கப்பட்ட எக் காரணமாக விண்ணப்பதாரர் பதிவு செய்யப்பட்டாரோ, அவற்றை வழங்கிய எவருக்கும் அல்லது எக்குழுவின் அல்லது ஆளின் முறைப்பாட்டின் மேல் விண்ணப்பதாரரின் பெயர் இயைபான இடாப்பிலிருந்து நீக்கப்பட்டதோ, அக்குழுவுக்கு அல்லது ஆளுக்கு விண்ணப்பத்தின் மீது தம் பக்க வழக்கை எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப்பம் ஒன்றை வழங்கலாம்;

(4) இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, இடாப்பொன்றில் பெயர் ஒன்று மீளச் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கான விண்ணப்பம் ஒன்று தொடர்பில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் நடவடிக்கை முறையானது உயர் தொழில்சார் நடவடிக்கைக் குழு தீர்மானிக்கக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

30. இக்கட்டளைச் சட்டத்தின் 25(1)(ஆ) என்னும் பிரிவின் கீழ் இடாப்பொன்றில் பெயர் ஒன்று மீளச் சேர்க்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பம் எவ்வேதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அவ்வேதுக்களைத் தருகின்றதும் பதிவாளருக்கு முகவரி இடப்பட்டதுமான எழுத்திலான கூற்றொன்று மூலம் செய்யப்படல் வேண்டும்.

## பாகம் V

## பொது

31. இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணையொன்று நடாத்தப்படுவதைத் தடை செய்கின்றன என இவ்வொழுங்குவிதிகளில் எவையும் கருதப்படலாகாது; அத்துடன், அத்தகைய விசாரணையொன்று நடாத்தப்படுமிடத்து, 14 இல் இருந்து 28 வரையிலான ஒழுங்குவிதிகள் (இவ்விரண்டும் உட்பட) பல்வேறு தொழிலர்களினால் அல்லது அவர்கள் தொடர்பில் அவ்வொழுங்கு விதிகள் எவற்றின் கீழும் வழக்கு நடவடிக்கைகள் எவ்வரிசைக் கிரமத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென உயர்தொழில்சார் நடத்தைக்குழு விடுக்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கு அமையவும் அவசியமான மாற்றங்களுடனும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

32. தொழிலர் ஒருவருக்கெதிரான ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி இவ்வொழுங்குவிதிகளின் கீழ் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு, அத்துடன் அத்தகைய குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகள் ஒழுங்குவிதிகள் 16, 22 அல்லது 23 ஆகியவற்றின் கீழ் அல்லது இவற்றின் எவையேனும் இரண்டின் கீழ் வருகின்றவிடத்து, விசாரணையில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையானது, வழக்கின் சூழ்நிலைகள் தேவைப்படுத்துகின்றவாறு உயர் தொழில்சார் நடத்தைக் குழு பணிக்கின்ற அத்தகைய விதத்தில் இருத்தல் வேண்டும்.

33. நீதியின் மீதான அக்கறை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் இருந்து அல்லது அவற்றின் பாகத்திலிருந்து பொது மக்கள் விலக்கப்படவேண்டுமென உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்குத் தோன்றுகின்ற விடத்து, உயர் தொழில்சார் நடத்தைக்குழு, பொது மக்கள் அவ்வாறு விலக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கலாம்.

34. (1) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகளின் நாலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வினா எதையும் உயர்தொழில் சார் நடத்தைக் குழு பரிசீலிக்குமிடத்து, உயர் தொழில்சார் நடத்தைக் குழு, தொழிலர் தவிர, பொது மக்களும், எல்லாத் திறத்தவர்களும் விலக்கப்பட வேண்டும் எனப்பணிக்கலாம்.

(2) இவ்வொழுங்கு விதிகள் எவற்றையும் பின்பற்றி உயர் தொழில்சார் நடத்தைக் குழு எடுக்கும் ஏதேனும் தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு, இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் கீழான பணிப்பொன்று ஏற்புடையதாதல் ஆகாது.

35. முப்பத்து மூன்றாம், முப்பத்து நாலாம் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகளின் கீழான உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் எல்லா வழக்கு நடவடிக்கைகளும் பகிரங்கமாக நடாத்தப்படல் வேண்டும்.

36. (1) தொழிலர் ஒருவருக்கெதிராக இவ்வொழுங்கு விதிகளின் கீழ் எடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், அத்தகைய தொழிலருக்கெதிராக சான்று அனைத்து வழக்கைச் சமர்ப்பிக்கும் சட்டத்தரணி, 37 ஆம் 38 ஆம் ஒழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக திறத்தவர் ஒருவராகக் கருதப்படல் வேண்டும்.

(2) முப்பத்து நாலாம் ஒழுங்கு விதியின் நோக்கத்துக்காக, சட்டத்தரணியானவர், வழக்கானது, 27 ஆம் ஒழுங்கு விதிக்கு இணங்க அவர் வழக்கின் நிலைபற்றிக் கூறுவதைத் தவிர, வேறு வகையாக வழக்கு விசாரணையில் அவர் செயலாற்ற இவ்வொழுங்கு விதிகளினால் அல்லது இவற்றின் கீழ் அவர் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வழக்கொன்றாக இருந்தால் மட்டுமே, திறத்தவர் ஒருவராகக் கருதப்படல் வேண்டும்.

37. எத்திறத்தவரினாலும் சாட்சியொருவர் ஆஜர் செய்யப்படுமிடத்து, அவர் முதலில் அவரை ஆஜர் செய்யும் திறத்தவரினால் விசாரணை செய்யப்பட்டு, பின் மற்றத் திறத்தவரினால் விசாரணை செய்யப்பட்டு, பின் திறத்தவரினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பின்னர் அவரை ஆஜர் செய்யும் திறத்தவரினால் மீள விசாரணை செய்யப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படாத ஆவண மொன்றுக்கு வாக்குமூலம் அளிக்கின்ற அல்லது குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு மறுக்கின்ற எவரினதும் சான்றை ஏற்றுக் கொள்ள உயர்தொழில்சார் நடத்தைக் குழு மறுக்கலாம்.

38. உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் உறுப்பினர்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கான சாட்சி எவரிடமும் அல்லது திறத்தவர் எவரிடமும் தவிசாளர் மூலம் வினாக் கொடுக்கலாம்.

39. உயர் தொழில்சார் நடத்தைக் குழு நீதிமன்றம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்படக் கூடியதான அத்தகைய ஏதேனும் வாய்மூல அல்லது வேறு சான்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

40. உயர் தொழில்சார் நடத்தைக் குழுவினால் ஏதேனும் வினாமீது எடுக்கப்படும் தீர்மானம் மீது உயர்தொழில்சார் நடத்தைக் குழு எடுக்கும் வாக்குகள் தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் பயன் கொண்டவையாய் இருத்தல் வேண்டும்.

(1) தவிசாளர், தமது கைகளை உயர்த்துவதன் மூலம் தமது வாக்குகளைக் குறித்துக் காட்டுமாறு உறுப்பினர்களை அழைத்தல் வேண்டும். அத்துடன், அதன் பின்னர், விடயத்துக்கேற்றவாறு வினாவானது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தீர்மானிக்கப்பட்டுவிட்டதெனத் தமக்குத் தோன்றுகின்றதென வெளிப்படுத்தல் வேண்டும்.

(2) அவ்வாறு தவிசாளரினால் வெளிப்படுத்தப்படும் முடிவுக்கு உயர் தொழில்சார் நடத்தைக் குழு உறுப்பினர் ஒருவரினால் சவால் விடப்பட்டால் தவிசாளர்.—

(அ) தனித்தனியாக தமது வாக்கை வெளிப்படுத்துமாறு உறுப்பினர் ஒவ்வொருவரையும் அழைத்தல் வேண்டும் ;

(ஆ) தமது சொந்த வாக்குப்பற்றி அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) உயர் தொழில்சார் நடத்தைக் குழுவின் எத்தனை உறுப்பினர்கள் அவ்வாறு வாக்களித்திருக்கிறார்கள் என்பதையும் வாக்களிப்பின் பெறுபேறு பற்றியும் அறிவித்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்கு விதிகளுக்கான நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வினா மீதான வாக்குகள் சமனாக இருக்குமிடத்து, அத்தகைய வினா தொழிலருக்குச் சாதகமானதெனக் கருதப்படல் வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதியின் நோக்கங்களுக்காக, தொழிலர் என்ற சொற்றொடர், 29 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் தமது பெயரை மீளச் சேர்க்கும்படி விண்ணப்பமொன்றினைச் செய்தவரான எவரேனும் ஆளையும் உள்ளடக்குகின்றது.

41. கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டிணைக்கப்பட்டதான அல்லது கூட்டிணைக்கப்படாததான ஆட்கள் குழுவொன்றாகவுள்ள எவரேனும் திறத்தவர், அந் நோக்கத்திற்கென முறையாக நியமிக்கப்பட்ட அலுவலகரொருவர் மூலம் அல்லது சட்டத்தரணியொருவர் மூலமும், அத்துடன் தனியாள் ஒருவரான எவரேனும் திறத்தவர் தாமே, அல்லது சட்டத்தரணியொருவர் மூலம், அல்லது உறுப்பினராகவுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பின் எவரேனும் அலுவலர் அல்லது உறுப்பினர் மூலம் அல்லது அவரது குடும்பத்தின் எவரேனும் உறுப்பினர் மூலம் தோன்றலாம்.

42. விசாரணையொன்றிற்கான எவரேனும் திறத்தவர், அதன் சார்பில் பதிவாளருக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும், உயர் தொழில்சார் நடத்தைக் குழுவினால் அதன் சார்பில் நிருணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின் மீதும் அத்தகைய திறத்தவர் எந்த நடவடிக்கைகளில் சமுகமளிப்பதற்கு உரித்துடையவராவாரோ அந்த நடவடிக்கைகளின் ஏதேனும் பாகம் இருப்பின் அதுபற்றிய சுருக்கெடுத்துக் குறிப்புகளின் வரிவடிவமும் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

43. சட்டத்தரணி அல்லது வழக்குரைஞர் உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும், ஏதேனும் விசாரணையில் உயர் தொழில் சார் நடத்தைக் குழுவின் முன்னிலையில் சான்றாக வைக்கப்பட வேண்டிய ஒவ்வோர் ஆவணத்தினதும் பிரதியொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

44. ஏதேனும் விசாரணைக்காக ஒரு திறத்தவர், சட்டத்தரணியொருவரால் அல்லது வழக்குரைஞரால் பிரதிநிதித்துவப்படுமிடத்து, அத்தகைய திறத்தவருக்கான இவ்வொழுங்கு விதிகளில் உள்ள குறிப்பீடு எதுவும், சந்தர்ப்பம் இடமளிக்கும் சந்தர்ப்பத்திலெல்லாம் அத்தகைய சட்டத்தரணியை அல்லது வழக்குரைஞரை உள்ளடக்குகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

45. தலைவரால் அல்லது துணைத்தலைவரால் விடயத்துக்கேற்றாற் போன்று செய்யப்பட வேண்டும் என இவ்வொழுங்கு விதிகளால் அதிகாரமளிக்கப்பட்டதான அல்லது தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் கருமம், தலைவர் அல்லது துணைத்தலைவர் சமுகமளிக்காதுவிட்டால் அல்லது அவருக்குச் செயலாற்ற இயலாவிட்டால், அதன் சார்பில் பேரவையால் அதிகாரமளிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் எவராலும் செய்யப்படலாம்.

46. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலொன்று தவிர்ந்த அறிவித்தல் எதுவும், சாதாரண அஞ்சலில் அல்லது நேரடியாக அனுப்பப்படலாம்.

47. உயர்தொழில்சார் நடத்தைக் குழுவானது, இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் நடைபெறும் எவையேனும் நடவடிக்கைகளின் சுருக் கெழுத்துக் குறிப்புகளை எடுப்பதற்கென சுருக்கெழுத்தாளர் ஒருவரை நியமிக்கலாம்.

## பாகம் VI

### நீக்கங்கள்

48. கட்டளைச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1959 நவம்பர் 27 ஆந் தேதிய 11 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

49. (1) சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, இந்த ஒழுங்கு விதிகளில் : –

"நடத்தை தொடர்பிலான வழக்கு" என்பது, தொழிலர் ஒருவர் –

(அ) மருத்துவத் தொழிலர் ஒருவராக அல்லது பல் மருத்துவர் ஒருவராக இருந்து கொண்டு உயர்தொழிலொன்றின் தொடர்பில் இகழார்ந்த நடத்தைக்குக் குற்றவாளியாகியுள்ளார் என ;

(ஆ) மருந்தாளர் ஒருவராக இருந்து கொண்டு நோயாளர் ஒருவருக்குச் சிகிச்சையளிப்பதில் திறமையின்மைக்கு அல்லது அசட்டைத் தனத்திற்குக் குற்றவாளியாகியுள்ளார் என அல்லது 41 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக் கப்பட்ட விவரணத்தைச் சேர்ந்த மருந்தாளர் அல்லது பெருந்தோட்ட மருந்தாளர் ஒருவராக இருந்து கொண்டு அவர் மருந்து அல்லது அறுவை மருத்துவத் தொழிலுக்குப் பொருத்தமற்றவர் எனக் காட்டும் நடத்தைக்குக் குற்றவாளியாகியுள்ளார் என அல்லது ;

(இ) ஔடதவியலாளர், மருத்துவிச்சி அல்லது தாதி ஒருவராக இருந்து கொண்டு அசட்டைத் தனத்தை அல்லது ஆற்றலின்மையைக் காட்டியுள்ளார் என

(ஈ) துணை மருத்துவ உதவியாளராக இருந்து கொண்டு அவரது உயர் தொழில்சார் நடத்தையில் அசட்டைத்தனம் காட்டியுள்ளார் என சார்த்துரைக்கப்பட்ட வழக்கொன்று எனப்பொருள்படும்.

"தவிசாளர்" விடயத்திற்கேற்ப முதனிலை நடவடிக்கைக் குழுவின் அல்லது உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் ஏதேனும் கூட்டம் தொடர்பில் பயன்படுத்தப்பட்டவிடத்து முறையே பேரவையின் துணைத்தலைவர் அல்லது தலைவர் எனவும் அவர்கள் இல்லாதவிடத்து அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் எனவும் பொருள்படும்.
"குற்றச்சாட்டு" என்பது விசாரணை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட குற்றச்சாட்டு எனப் பொருள்படும்.
"பேரவை" என்பது கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவை என்று பொருள்படும்.
"கட்டளைச் சட்டம்" என்பது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டமெனவும் பொருள்படும்.
"தொழிலர்" என்பது கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் விதத்தில் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும்.
"தலைவர்" என்பது பேரவையின் தலைவர் என்று பொருள்படும்.

"இயைபான இடாப்பு" என்பது,

(அ) மருத்துவத் தொழிலர் ஒருவரின் விடயத்தில், இலங்கையில் மருத்துவ அல்லது அறுவை மருத்துவத் தொழில் புரிவதற்குத் தகைமை பெற்ற மருத்துவத் தொழிலர்களின் இடாப்பு ;

(ஆ) பல் மருத்துவர் ஒருவரின் விடயத்தில், இலங்கையின் பல் மருத்துவ அல்லது அறுவை மருத்துவத் தொழில் புரிவதற்குத் தகைமை பெற்ற பல் மருத்துவர்களின் இடாப்பு ;

(இ) மருந்தாளர் ஒருவரின் விடயத்தில், கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் வைத்திருக்கப்படும் மருந்தாளர்களின் இடாப்பு ;

(ஈ) ஔடதவியலாளர் ஒருவரின் விடயத்தில் இலங்கையின் ஔடதவியலாளர்களாகச் செயலாற்றுவதற்குத் தகைமை பெற்ற ஆட்களின் இடாப்பு ;

(உ) மருத்துவச்சி ஒருவரின் விடயத்தில் இலங்கையின் மருத்துவச்சிகளாகத் தொழில் புரிவதற்குத் தகைமை பெற்ற பெண்களின் இடாப்பு; அத்துடன்

(ஊ) தாதி ஒருவரின் விடயத்தில், இலங்கையில் தாதிகளாகத் தொழில் புரிவதற்குத் தகைமைபெற்ற ஆட்களின் இடாப்பு என்று பொருள்படும்.

(எ) துணை மருத்துவ உதவியாளர் ஒருவரின் விடயத்தில், துணைமருத்துவ உதவியாளர்களாக இலங்கையில் தொழில் புரிவதற்கு தகைமை பெற்ற ஆட்களின் இடாப்பு என்று பொருள்படும்.

(2) இந்த ஒழுங்கு விதிகளில் ஏதேனும் முறைப்பாடு, அறிக்கை அல்லது இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் எடுக்கப்படும் எவையேனும் நடவடிக்கைகள் தொடர்பில் தொழிலர் ஒருவரைப் பற்றிய ஏதேனும் குறிப்பீடு சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாற் தவிர, எந்தத் தொழிலருக்கெதிராக அத்தகைய முறைப்பாடு அல்லது அறிக்கை செய்யப்பட்டுள்ளதோ அல்லது அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவோ அந்தத் தொழிலாளரைப் பற்றிய குறிப்பீடு எனப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

### முதனிலை நடவடிக்கைக் குழு

(ஒழுங்கு விதி 6)

1. (இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதனிலை நடவடிக்கைக்குழு அப்போதைக்கு பேரவையின் துணைத்தலைவராக இருக்கும் ஆளையும் அத்துடன் பேரவையின் கூட்டமொன்றில் பேரவையின் உறுப்பினர்களிடையேயிருந்து இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வேறு நாலு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. குழுவின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோராளும் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவாறான காலப்பகுதிக்கு பதவி தாங்குதல் வேண்டும் ; அத்துடன் உறுப்பினர் ஒருவர் ஏதேனும் காரணத்துக்காக மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது பேரவையின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால் அவர் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

3. குழுவின் மூன்று உறுப்பினர்கள் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் கூட்ட நடப்பெண் ஒன்றாக அமைதல் வேண்டும்.

4. பேரவையின் துணைத்தலைவர், குழுவின் தவிசாளராதல் வேண்டும் என்பதுடன் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். ஏதேனும் காரணத்திற்காக குழுவின் ஏதேனும் கூட்டத்தில் துணைத்தலைவர் இல்லாவிடில், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கென சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் தங்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

5. குழுவின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் குறைபாடு உள்ளதென்ற காரணத்தினால் மட்டும் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

6. குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்கான எல்லா கேள்விகளும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில், தவிசாளர் அல்லது குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் வேறு எவரேனும் உறுப்பினர் அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

7. பதிவாளரே குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும். அவர் குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும். ஆனால் அதன் உள்ளவாறான தீர்மானங்களில் பங்கு கொள்ளுதல் ஆகாது.

8. குழுவின் ஏதெனும் கூட்டம் காலத்துக்குக் காலம் குழு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறன அத்தகைய பிந்திய திகதிக்கு அல்லது தேதிகளுக்கு ஒத்திப் போடப்படலாம்.

9. குழு பின்வரும் கடமைகளையுடையதாதல் வேண்டும் -

(அ) இந்த ஒழுங்கு விதிகளுக்கிணங்க தலைவரால் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டை அல்லது அறிக்கையைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் ; அத்துடன்

(ஆ) அவ்விதம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின்னர் விசாரணைக்கென உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு ஆற்றுப் படுத்தப்பட வேண்டிய வழக்கொன்று உள்ளதென குழு தீர்மானித்தால் அறிக்கையொன்றைத் தயாரித்து உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அனுப்பி வைத்தல்.

10. முறைப்பாடு அல்லது அறிக்கையொன்று இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவிடத்து குழுவானது இயலு மானவரை கூடிய விரைவில் அத்தகைய முறைப்பாட்டை அல்லது அறிக்கையை கவனத்திற்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும், என்பதுடன் அதற்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்ட ஏதேனும் விளக்கத்தை அல்லது இணைக்கப்பட்ட சத்தியக் கடதாசிகளை கருத்திற்கொண்டு அதன் மீதான அதன் அறிக்கையைத் தயாரித்து உயர்தொழில் சார் நடத்தைக்குழுவுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

11. குழுவானது, பொருத்தமானதென அது கருதினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் முறைப்பாடு அல்லது அறிக்கை மீதான அதன் அறிக்கையை உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்கு அனுப்புமுன்னர் வழக்கின் சூழ்நிலைகளில் அவசியமானதென அல்லது தேவையானதென அது கருதுகின்றவாறான அத்தகைய மேலதிக புலனாய்வுகளைச் செய்விக்கச் செய்யலாம் அல்லது சட்டத்தரணியிடமிருந்து அல்லது சட்டவரைஞரிடமிருந்து மதியுரையை அல்லது உதவியைப் பெறலாம்.

**இரண்டாம் அட்டவணை**

**(ஒழுங்கு விதி 11)**

(1) உயர்தொழில் நடத்தைக் குழுவானது, அப்போதைக்கு பேரவையின் தலைவராயிருக்கும் ஆளையும், குழுவின் உறுப்பினர்களல்லாத பேரவையின் உறுப்பினர்களிடையேயிருந்து பேரவையின் கூட்டமொன்றில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வேறு பத்துப் பேரவை உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். பதிவாளர் அத்தகைய கூட்டம் பற்றி ஆகக் குறைந்தது பத்து நாள் முன்னறிவித்தலை பேரவையின் அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுத்தல் வேண்டும்.

(2) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் உறுப்பினரொருவராகத் தோந்தெடுக்கப்பட்ட ஒவ்வோராளும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது தேர்தற் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். அத்துடன் உறுப்பினர் ஒருவர், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது ஏதேனும் காரணத்திற்காகப் பேரவையின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(3) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் தலைவரும் நான்கு உறுப்பினர்களும் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் எதேனும் கூட்டத்தில் கூட்ட நடப்பெண்ணாக அமைதல் வேண்டும்.

(4) பேரவையின் தலைவரே உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் தலைவராதல் வேண்டும், என்பதுடன் அதன் எல்லாக் கூட்டங் களுக்கும் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(5) உயர்தொழிலல்சார் நடத்தைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வேறுவகையாக உடன்பட்டாலன்றி, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் கூட்டங்கள், தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு வாரத்திற்கு ஒருமுறை நடாத்தப்படுதல் வேண்டும்.

(6) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அதன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் சமுகமளித்தல் வேண்டும் என்பதுடன் எவரேனும் உறுப்பினர் ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளிக்காமை, உயர்தொழில்சார் நடத்தைக் குழுவினால் நடாத்தப்படும் விசாரணை தொடர்பிலான எவையேனும் நடவடிக்கைகளில் அத்தகைய உறுப்பினர் பங்குபற்றுவதற்குத் தடையாயிருத்தலும் வேண்டும்.

(7) (அ) உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் உறுப்பினர்கள் வரவு மேலேயுள்ள (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்ட நடப்பெண்ணுக்குக் குறைவானதாயிருப்பின் அத்தகைய கூட்டம் மேலுமொரு தேதிக்குப் பின்போடப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆயினும், ஏதேனும் காரணத்திற்கான ஏதேனும் விசாரணையில் பங்குற்றுவதற்குத் தகுதியுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலேயுள்ள (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்ட நடப்பெண்ணுக்கு குறைவானதாயிருப்பின் புதிய குழுவொன்று அமைத்துரு வாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விசாரணையானது அவ்வாறு அமைத்துருவாக்கப்பட்ட குழுவின் முன்னிலையில் ஆரம்பத்திலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(8) உயர்தொழில்சார் நடத்தைக்குழுச் செயலாளரே பதிவாளராக இருத்தல் வேண்டும். அவர் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூட்டங்களில் சமுகமளித்திருப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும். ஆனால் அதன் உள்ளவாறான தீர்மானங்களில் பங்குபற்றுதல் ஆகாது.

(9) இதற்கான நாலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவைகளைத் தவிர உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுவதற்கான மற்றெல்லாக் கேள்விகளும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையொன்றினாலேயே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் தவிசாளர் அல்லது அதன் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் வேறு எவரேனும் உறுப்பினர் அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

**மூன்றாம் அட்டவணை** **(ஒழுங்கு விதி 12 (3))**

விசாரணை அறிவித்தற் படிவம்

கொழும்பு 7, 1990 .................

ஐயா/அம்மணி,

தங்களுக்கெதிராக உயர்தொழில்சார் நடத்தைக் குழுவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடு/அறிக்கை ஒன்று தொடர்பாக, தங்களுக்கெதிராகப் பின்வரும் குற்றச் சாட்டையிட்டு /குற்றச்சாட்டுகளையிட்டு விசாரணையொன்று நடாத்தப்படவுள்ளது என உயர்தொழில்சார் நடத்தைக் குழுவின் சார்பில் இத்தால் தங்களுக்கு அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

(இங்கே குற்றச்சாட்டை/குற்றச்சாட்டுகளைக் குறித்துரைக்கவும்) தங்களுக்கெதிரான மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டை/குற்றச்சாட்டுக்களை கருத்திற் கொள்வதற்காகவும் அத்துடன் (05 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 25 (1)(அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு உயர்தொழில்சார் நடத்தைக்குழு கட்டளையிட வேண்டுமா வேண்டாமா என்பதனைத் தீர்மானிப்பதற்காகவும் உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் கூட்டமொன்று 19 ......... மாதம் ......... ஆம் நாள் மு.ப. /பி.ப. ......... மணிக்கு என்னுமிடத்தில் நடைபெறும் என இத்தால் தங்களுக்கு மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கு/குற்றச்சாட்டுகளுக்கு எழுத்தில் மறுமொழி அளிக்குமாறும் அத்துடன் மேலே குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் உயர்தொழில்சார் குழு முன்னிலையில் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றுமாறும் இத்தால் தாங்கள் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள். அவ்வாறு தோன்றத் தவறினால் உயர்தொழில்சார் நடத்தைக்குழு தாங்கள் இல்லாமலேயே சொல் லப்பட்ட குற்றச்சாட்டை/குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து முடிவெடுக்கும் தத்துவத்தைக் கொண்டிருக்கும்.

சொல்லப்பட்ட குற்றச்சாட்டு/குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தாங்கள் அளிக்க விரும்பும் ஏதேனும் மறுமொழி, விளக்கம் அல்லது வேறு கூற்று அல்லது தகவல் உயர்தொழில்சார் நடத்தைக் குழுவிற்காக சட்டத்தரணிக்கு, விசாரணை நடாத்துவதற்கென நியமிக்கப்பட்ட தினத்திற்கு முந்திய ................. தினங்களுக்குக் குறையாமல் கிடைக்கக்கூடியதாக அவருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஏதேனும் காரணத்திற்காக விசாரணை பின்போடப்பட வேண்டுமெனத் தாங்கள் விரும்பினால் என்ன ஏதுக்கள் மீது அவ்விதம் பின் போடப்படவேண்டுமெனத் தாங்கள் விரும்புகிறீர்கள் என்பதனைக் குறிப்பிட்டு உயர்தொழில்சார் நடத்தைக் குழுவிற்கான சட்டத்தரணிக்கு அதன் பொருட்டு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

மருத்துவ ஒழுக்காற்று (நடவடிக்கைமுறை) ஒழுங்குவிதிகளில் பிரதியொன்று தங்களது தகவலுக்காக இத்துடன் அனுப்பப்படுகின்றது.

இலங்கை மருத்துவப் பேரவைக்கான
சட்டத்தரணி

**நாலாம் அட்டவணை**

**(ஒழுங்குவிதி 34(1) அத்துடன் 41(3))**

**ஒழுங்குவிதி 34(1) ஏற்புடைத்தாகும்**

**கேள்விகள்**

1. தொழிலர் சமுகமளிக்கமாட்டார் என்பது ஒவ்வாதிருப்பினும் உயர்தொழில்சார் நடத்தைக்குழு விசாரணையை ஆரம்பித்து நடத்தலாமா என்ற ஏதேனும் கேள்வி.

2. போதியளவு சாட்சியம் சமர்ப்பிக்கப்படவில்லை அல்லது குற்றச்சாட்டில் சார்த்துரைக்கப்பட்ட அத்தகைய நிகழ்வு ஏதேனும் உயர் தொழிலைப் பொறுத்தளவில் இகழார்ந்த நடத்தையாக அமையமாட்டாது எனக் கருதும் வகையில் குற்றச்சாட்டொன்றிலுள்ள அத்தகைய நிகழ்வு அமைந்துள்ளது என்ற ஏதேனும் சமர்ப்பணம் உட்பட சட்டப்பிரச்சனை ஒன்றின் மீது ஒரு சமர்ப்பணத்தை அல்லது ஆட்சேபனையை உயர்தொழில்சார் நடத்தைக்குழு ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்ற ஏதேனும் கேள்வி.

3. ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் உயர்தொழில்சார் நடத்தைக்குழுவின் முடிவு பிற்போடப்பட வேண்டுமா என்பதனைப் பற்றிய ஏதேனும் கேள்வி.

4. சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்வுகளின் மீது உயர்தொழில்சார் நடத்தைக் குழு தீர்மானமொன்றை எடுத்தபின்னர் எழுகின்ற, விடயத்திற்கேற்ப, தொழிலர் ஒருவர் ஏதேனும் உயர்தொழிலைப் பொறுத்தளவில் இகழார்ந்த நடத்தைக்கு, அல்லது உயர்தொழில்சார் கடமைகள் தொடர்பில் அசட்டைத் தனத்திற்கு அல்லது ஆற்றலின்மைக்குக் குற்றவாளியாக இருக்கின்றாரா என்பதனை உயர்தொழில் சார் நடத்தைக் குழு தீர்மானிக்க முற்படலாமா என்பதனைப் பற்றிய ஏதேனும் கேள்வி.

5. தொழிலர், நீதிமன்றமொன்றில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என எண்பிக்கப்பட்டுள்ள ஒரு விடயத்தில் அல்லது ஏதேனும் உயர்தொழிலைப் பொறுத்தளவில் தொழிலர் விடயத்திற்கேற்ப இகழார்ந்த நடத்தைக்கு, அல்லது உயர் தொழில்சார் கடமைகள் தொடர்பில் அசட்டைத் தனத்திற்கு அல்லது ஆற்றலின்மைக்கு குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள ஒரு விடயத்தில், கட்டளைச்சட்டத்தின் 25(1)(அ) என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பதிவாளர் பணிக்கப்பட வேண்டுமா என்று ஏதேனும் கேள்வி.

2- 160

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.